தெணியான்

"தெணியான்"

# வைகறை

கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.
—பாரதி

மலர்: 1 | ஜனவரி 1970 | இதழ்: 1

## வைகறை
(இலக்கிய
முத்திங்கள் இதழ்)

இணையாசிரியர்கள்:-
**விஜயேந்திரன்**
**நிமலன்**

இதழ் முகவரி:
"வைகறை"
அலுவலகம்
விவேகானந்தா டியூட்டரி
மல்லாகம்.
(இலங்கை)

O வணக்கம்

O கவிதை
இ. நாகராசன்
"தமிழடியான்"

O கட்டுரை
கனக. செந்திநாதன்
விஜயாநெஞ்சன்

O பேட்டி
க. சச்சிதானந்தன்

O கதை
மு. கனகராஜன்

வைகறையில் வெளிவரும் எல்லா விஷயங்களுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

# வ ண க்

எனது இதயத்தில் பன்நெடுங்காலம், கனன்று கொண்டிருந்த பொற்கனவே, ''வைகறை'' வடிவில் உங்கள் கைகளிலே தவழ்கிறது.

முறையான மொழியறிவு; மெய்ம்மையான இலக்கிய பிரக்ஞை நடுநின்று எழுத்தாளர்களின் தரத்தை இனங் காணுகின்ற மனப்பாங்கு, இந்தகைய சிறப்பம்சங்களில் ஒன்றைத்தானும் தம்பாற்கொள்ளாத பாடாவதிப் பத்திரிகைகளுக்கு நடுவே விடிவின் அறிகுறியாய் ''வைகறை'' முகிழ்ந்திருக்கிறது. புத்தம்புதிய இலக்கிய சிந்தனைகளை, வாழக்கூடிய உன்னத சிருஷ்டிகளை ஆவலோடு வெளியிட ''வைகறை'' காத்திருக்கிறது.

''வைகறை'' எந்தவொரு எழுத்தாளனுக்கும் குடை பிடிக்கவோ 'பக்கவாத' பீடிப்புகளிலே சிக்குண்டு சீரழிந்து கொண்டிருக்கின்ற எம்நாட்டு இலக்கிய குழுக்களுக்கு 'ஜே' போடவோ தோன்றவில்லை. மாறாக அது—

தரமுயர்ந்த எழுத்தினை பிறப்பிக்கவல்ல எழுத்தாளர்களுக்கு எவ்வித அந்நிய மனோபாவமும் அற்ற முறையில் களம் அமைத்துக்கொடுக்கவும்,

கவின்மிகு கானக மலர்களனைய நிலையில் எங்கெங்கோ மலர்ந்து, அரங்கிற்கு வாராத ஆக்கங்களை வெளிக் கொணரவுமே பிறந்தது.

எழுத்தாள அன்பர்களே, வாசகப் பெருமக்களே ''வைகறை''யின் ஸ்திரமான பயணத்திற்கு புனிதமான கோட்பாடுகளுக்கு துணைநிற்பீர்களாக.

அன்பு
—விஜயேந்திரன்

விவேகானந்தா டியூட்டரி,
மல்லாகம்.

# க ம்

அரசியற் கயிறுதிரிப்புக்களுக்கும், தனிமனிதனின் அந்தரங்க ஆபாசங்களை எழுதிப் பணஞ்சேர்ப்பதற்கும் ஆரம்பிக்கப்பட்டுக் கிளைத்துப் பெருகிநிற்கும் ஈழத்துப் பத்திரிகை உலகிலே, எழுத்தாளன் தன்மானமற்றுப் பத்திரிகையாளரின் கைப்பொம்மையாய் ஆடுவதைப் பார்த்துக் கலங்குகின்றன இலக்கிய நெஞ்சங்கள்.

ஊமைக் கனவாய்ப் பலருள்ளத்திலுள்ள இக்குறையைப் போக்குவான்வேண்டி எழுத்தாளர்களுக்கு முழுச் சுதந்திரமும் அளித்து எழுதவைத்து ஓர் சஞ்சிகையை வெளியிடவேண்டும் என்ற அவா என்னைத் தூண்டிவந்தது. ஆரம்பத்தில் ஆண்டிதழாகவே தொடங்க ஆயத்தம் செய்தேன். அப்பொழுது தான் நண்பர் விஜயேந்திரன் ''வைகறை'' பத்திரிகையில் ஒத்துழைக்கும்படி கேட்டார். இருவரின் அடிப்படை இலட்சியநோக்கமும் ஒன்றான காரணத்தாலும், பரஸ்பரம் குறைநிறைகளை உணர்ந்துகொண்டவர்கள் என்ற காரணத்தாலும் இருவரின் தனித்தன்மைகளுக்கும் பங்கம் நேராதவகையில் ஒத்துழைக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் இக் கூட்டுப்பொறுப்பை ஏற்றுள்ளேன்.

இலக்கியப் பத்திரிகைகள் முழு வேகத்துடன் பிறந்து வளர்ந்து.. சோர்ந்து.. வளைந்து.. மறைந்த, சோக வரலாறு என் கண்ணுள்ளே தெரிகிறது. பொருளாதார நட்டத்தை எதிர்பார்த்தே தொடங்குகிறோம். தமிழிலக்கியப் புத்தெழுச்சியாளர், உலகின் எந்த மூலையிலிருந்தாலும் ''வைகறை'' அவர்களை வரவேற்கிறது; தன் இலக்கியப் பணியில் ஒத்துழைக்க ஆர்வத்துடன் அழைக்கிறது.

அன்பன்
நிமலன்.

''உயரியநாவல்''
ஏழாலை.

# "பா"

—கவிஞர் இ. நாகராஜன்—

தாழ்வு தளர்ந்திட
வாழ்வு மலர்ந்திடத்
தண்டமிழ்ப் பாசமைப்போம்-அதில்
ஆழ்ந்து திடம்நமைச்
சூழ்ந்து துயர்கெடச்
சோதி நிலையமைப்போம்-உயர்
நீதி நெறி வகுப்போம்.

நீதி வழியிலெம்
சாதி தகவுற
நீண்ட களம் அமைப்போம்-அதில்
ஓதி யுணர்ந்தவர்
பாதை வகுத்திடச்
சென்று நிலையடைவோம்-துயர்
வென்று பலமடைவோம்.

வென்றவர் யாவரும்
ஒன்று திரண்டிட
நன்று நலம் விளைப்போம்—மனம்
ஒன்றி உரமுறச்
சென்ற சிறுமையைச்
சாடி உயர்வடைவோம்—திடம்
நாடிப் பயிர்விளைப்போம்.

நாடு நமதெனக்
கூடித் தொழில்களைத்
தேடி வளர்த்திடுவோம்-வரும்
கேடு தகர்ந்திடப்
பாடுகள் பட்டுயர்
நன்மை நலமகாண்போம்-கொடு
தின்மையை நீக்கிடுவோம்.

# இலக்கிய உலகிலே......

— விஜயேந்திரன் —

நம் நாட்டின் நல்ல விமரிசகர்களில் ஒருவரான கலாநிதி க. கைலாசபதி அவர்கள் ''ஈழத்தில் கவிதைத் துறையில் மட்டுநகர் தான் முன்னணியிற் செல்கிறது'' என கொழும்பிலே நடந்த கருத்தரங்கொன்றிலே கூறியிருக்கிறார். இதே உண்மையைத்தான் எம் நாட்டின் முதல் வரிசைக் கவிஞர்களில் ஒருவரான ''மஹாகவி'' அவர்களும் வேறொரு கருத்தரங்கொன்றில் வெளியிட்டிருக்கிறார்.

இவ்விருவரினதும் கூற்றை நடுநின்று நோக்கும் சுவைஞர்கள் யாரும் மறுக்கமாட்டார்கள். இருப்பினும் இந்த ஸ்படிக உண்மை யாழ்ப்பாணக் கவிராயர்களுக்குச் சற்று கசப்பாகத்தானிருக்கும்? யாழ்ப்பாணக் கவிராயர்களில், திரு. முருகையனையும், - ''மஹாகவி''யையுந் தவிர மற்றவர்களைக் ''கவிஞர்கள்'' என்று எப்படித்தான் அழைப்பது? காக்கை வலிப்புக்காரன் மாதிரி உடம்பை அலட்டிக்கொள்பவர்களையும், கன்னா பின்னா வென்று கத்தித் தொலைப்பவர்களையுந்தானே எம்மூர்க் கவியரங்குகளிலே சந்திக்கிறோம்? இத்தகைய ''வியாதிக்காரர்''களை எல்லாங் ''கவிஞர்கள்'' என அழைத்தால் நீலாவணன், இராஜபாரதி, நுஃமான், காசி.ஆனந்தன் போன்ற உண்மைக் கவிஞர்களை எப்படி அழைப்பது?

ஃ ஃ ஃ

''இரசிகமணி கனக. செந்திநாதனுடைய கருத்துக்களுக்கெல்லாம் பெருமாள் மாடாட்டம் தலையாட்டுபவன் யான் அல்லன். அவருடைய கருத்துக்களில் சிலவற்றை

யான் ஏற்றுக்கொள்ளாதிருப்பினும், சமீபத்தில் இரசிகமணியைப்பற்றி ஒரு எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்ட கருத்து எனக்கு ஆவேசத்தையும், அதேவேளையில் வேதனையையும் கிளப்பிவிட்டது. அந்த பிரகிருதி சொன்னது இதுதான்;

''செந்தில்நாதன் என்ன விமரிசகர்? அவருக்குத் தமிழ் மட்டுந்தானே தெரியும்?''

அடக்கண்ணராவிகளே! செந்தில்நாதன் என்ன ஷேக்ஸ்பியரையும், மில்டனையுமா விமரிசனஞ் செய்கின்ருர்? தமிழனுய்ப் பிறந்து, தமிழிலேயே எழுதிய கம்பனையும், பாரதியையும், புதுமைப்பித்தனையும், சோமசுந்தரப் புலவரையும் விமரிசனஞ் செய்யுந் தமிழ்மகனுக்கும் ஆங்கில அறிவோ, வேற்றுமொழி அறிவோ வேண்டற்பாலதா?

ஃ ஃ ஃ

எங்கள் கல்விஅமைச்சர் ஈரியகொல்லே அவர்கள் சாகித்திய மண்டலக் கருத்தரங்கில் குழந்தை இலக்கியம் பற்றி பிரஸ்தாபித்ததிலிருந்து ஈழத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் குழந்தை இலக்கியம் பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. ''அம்பி''யின் நெடுநாட் தயாரிப்பான ''அம்பிப்பாடல்'' அரங்கத்திற்குவந்துவிட்டது அழகிய கலசத்தில் (புத்தக அமைப்பைத்தான் சொல்கிறேன்) புளிச்சல் பாயாசத்தைத்தான் அம்பி வார்த்துத் தந்திருக்கிருர். வெளியே ஒய்யாரக்கொண்டைதான் உள்ளே?

ஃ ஃ ஃ

அதுசரி. குழந்தை இலக்கியம்பற்றி விளாசித்தள்ளுபவர்கள் மறைந்த தமிழகக் கவிஞர் ''தமிழ் ஒளி''யின் குழந்தைக் கவிதை பற்றியும் காலஞ்சென்ற ''யாழ்ப்பாண''னின் குழந்தைக் கவிதைகள் பற்றியும் ஏன் அதிகம் பேசுவதில்லை அவர்களின் அற்புதமான குழந்தைக் கவிதைகளைப் படிக்காததின் விளைவா அல்லது பக்கசாய்வுக்காக ரஸனுணர்வை பலியிட்டு விட்டார்களா?

பேட்டி:

# சச்சிதானந்தனைச் சந்தித்தேன்

— கமலக்கண்ணன் —

எமது ஈழமணித் திருநாடு பெருமைப்படக்கூடிய தமிழறிஞர்களில் ஒருவரும், சிறந்த கவிஞருமான பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களை "வைகறை" சார்பில் பேட்டிகாண யான் மாவைக்குச் சென்றபோழ்து அவர் மகிழ்வோடு என் விருப்பிற்கிசைந்தார். எனது கேள்விகளுக்கு அவரளித்த ஆணித்தரமான பதில்களைப்படியுங்கள்.

கேள்வி: "ஈழத்தைப் பொறுத்தவரை கவிதைத்துறையில் மட்டுநகர்தான் முன்னணி இடம் வகிக்கிறது" எனப் பேராசிரியர் க. கைலாசபதி தொடக்கம், பிரபல கவிஞர் "மஹாகவி" வரை அடித்துச் சொல்கின்றார்களே! இதுபற்றி தங்கள் கருத்தென்ன?

பதில். யான் இதனை ஏற்பதற்கில்லை. காரணம் கவிதைத் துறையில் மட்டுநகர்தான் முன்னணி இடம் வகிக்கின்றது, குறிப்பிட்ட முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் கிடையா. மேலும் இவ்வண்ணம் வேற்றுமைப் பாவனையோடு அபிப்பிராயங்களை வெளியிடுவது விமரிசக லட்சணமும் அல்ல.

கேள்வி: குறிப்பிட்ட ஒரு சில சந்தங்கள் - மீண்டும் மீண்டும் ஒரேவித எதுகைமோனைத் தொடர்கள்- புதுமையற்ற பொருள்முறை, இவைதாம் தற்காலத் தமிழ்க் கவிதைகள் பலவற்றின் யோக்கியதாம் சங்களென கருதுகிறேன். தாங்கள் கருதுவதென்ன?

பதில். கவிதை என்பது தமிழிலே சரித்திரம் அறியா நாட்டொட்டே பலப்பல முன்னேற்றங்களையும், புதுமைகளையுங் கண்டிருக்கிறது. அஃது எத்தனையோ மொழிகளில் எவ்வாறெல்லாமோ எழுதப்பட்டபொழுதும் அதன் அடிப்படைத் தத்துவம் எல்லா மொழிகளிலும் ஒரே தன்மை கொண்டதுதான். ஆகவே எமது கவிவாணர்களும் தமிழ்மொழியின் அமைப்புக்கு மாறில்லாது-வாசகர் மாட்டு கவிதைச்சுவையை உணர்த்தக்கூடிய முறையில் யாப்பில் புதுமைசெய்து கவி அமைக்கலாம். ஆயினும் அத்தகைய திருப்பத்தை உண்டாக்கவல்ல கவிதாமேதைகள் ஆயிரத்திலொருவராகவே இருப்பர். சாதாரண புலவர்களால் அத்தகு மேன்நிலையை எட்டவே முடியாது.

கேள்வி: உண்மையான இலக்கிய விமரிசகனின் சிறப்பம்சங்கள் யாவை? அத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட விமரிசகர்கள் எம்நாட்டில் இருக்கிறார்களா?

ஒரு உண்மையான விமரிசகனுக்கு ஒரு பாற் கோடாத் தன்மை - அதீத ரசனுபாவம் - மொழியறிவு ஆகியன சிறப்பம்சங்களாகும். இத்தகைய விமரிசகர்கள் இந்நாட்டில் மட்டுமன்று எந்நாட்டிலும் எவரும் இலர். எம் நாட்டின் நல்ல விமரிசகர்களாக கனக. செந்திநாதன் அ. செ. முருகானந்தம், க. கைலாசபதி, சிற்பி ஆகியோரை நான் கருதுகிறேன்.

கேள்வி: பாரதிக்குப்பின் தோன்றிய கவிஞர்கள் தங்கள் இதயத்தைக் கவர்ந்த நான்கு கவிஞர்களைக் குறிப்பிடுவீர்களா?

பதில்: கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, பாரதிதாசன் சோமசுந்தரப்புலவர், ச. து. சு. யோகியார் ஆகியோரைக் குறிப்பிடுவேன்.

கேள்வி: தமிழ் அரசியற் தலைவர்கள் எழுத்தாளர்கள் பொதுமக்கள் இந்த முப்பிரிவினரில் உண்மையாகவே தமிழுக்கு எம் நாட்டில் பிரகாசமான எதிர்காலத்தை சமைக்கவல்லவர் யார்?

பதில். எழுத்தாளர்களாலேயே அதுமுடியும்.

கேள்வி: காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணுவைப் போன்ற தமிழறிந்த ஒரு மக்கள் தலைவர் எம்மிடையே தோன்றியிருந்தால் அண்ணுவைப் போன்று தன் பொழுதை எல்லாம் தமிழர் நலனுக்கே அர்ப்பணித்திருந்தால் எமது நாட்டில் எப்பொழுதோ தமிழன் சுய கௌரவத்தோடு தலைநிமிர்வதற்கு வழி பிறந்திருக்கும் அல்லவா?

பதில். ஆமாம்.

கேள்வி: சுவாமி விபுலானந்தர் - நவநீத கிருஷ்ணபாரதி இவர்களிடத்துத் தாங்கள் கொண்டிருந்த தொடர்புபற்றி கொஞ்சம் சொல்வீர்களா?

பதில்: சுவாமி அவர்கள் தனது 'யாழ்நூல்' எழுதப் படுகின்ற காலை என்னை தனக்கு ஒத்துழைப்பு நல்கும்படி வேண்டி கடிதம் எழுதி அழைத்தார். அதற்கிணங்கி வெள்ளவத்தை ராமகிருஷ்ணமடத்தில் அவரோடு இணைந்து "யாழ் நூல்" சம்பந்தமான ஆய்வுகளிற் பணி புரிந்தேன். அவரிடத்து யான்பெற்ற அனுபவம் பற்றி முன்னொருகால் "ஈழமணி" இதழில் விரிவாக எழுதியுள்ளேன்.

நவநீத கிருஷ்ண பாரதியவர்கள் எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்களில் ஒருவர். "செய்யுள் இயற்றல்" என்னும் பகுதியை அவரிடமே யான் பயின்றேன்.

கேள்வி: "ஆனந்தத்தேன்" என்ற தரமான கவிதை நூலினையும், அரசியல் தலைவரின் வரலாருக இருந்த பொழுதும் "தியாக மாமலை" என்ற தெளிந்த - உயிரோட்டமுள்ள நடையிலமைந்த நூலினையும் வெளியிட்ட தாங்கள், இது போழ்து நூல்வெளியீட்டிலோ - பத்திரிகைகளுக்கு எழுதுவதிலோ அககறை காட்டாமைக்குக் காரணங்கள் யாவை?

பதில்: நூல் வெளியீட்டுக்கு பொருள் வசதியின்மையே காரணம். வெளியிடப்படாத அநேக கையெழுத்துப் பிரதிகள் நூல் வடிவில் இருக்கின்றன. அவற்றில் சில ஓரிரு ஆண்டுகளில் அச்சுவாகனமேறக்கூடும்.

பத்திரிகைகளுக்கு எழுதுவதெனில் நான் எழுபவற்றைத் திரும்பப் பிரதி பண்ணுவதற்கு உதவியில்லை. இதுவே நான் பத்திரிகைகளுக்கு எழுதாமைக்குக் காரணம்.


## அடுத்த இதழில்.........

**"வைகறை" இரண்டாவது இதழ்**

ஏப்ரல் முதல்வாரத்தில் வெளிவரும்.

அவ்விதழில்

**திரு. சீனிவாசன் எம். ஏ. அவர்களின்**

பேட்டி இடம்பெறுவதோடு

**தமிழகத்திலும், ஈழத்திலும்**

உள்ள தலைசிறந்த எழுத்தாளர்களின்

படைப்புகளும் இடம்பெறுகின்றன.


## முடிவும் முதலும்

எங்கே நீ மகத்தான ஒரு முடிவைக் காண்கிறுயோ, அங்கே மகத்தானதோர் ஆரம்பமும் உண்டாகப்போகிறதென்பதை உறுதியாக நம்பு. ஒரு கோரமான, துன்பம் நிறைந்த அழிவு உன் மனத்தை அச்சுறுத்தும்போது, ஒரு பெரிய மகத்தான சிருஷ்டியும் நிச்சயமாக வரவிருக்கிறதென அதற்கு ஆறுதல் கொள். இறைவன், அமைதி[illegible] சிறு குர[illegible] மட்டுமின்றி, தீயிலும் புயல் காற்றிலும் உள்ளான்.

——மஹரிஷி அரவிந்தர்

# ஓ, என் மானஸதேவியே உன்னை நினைக்கிறேன்!

— விஜயாநெஞ்சன் —

அவளைப்பற்றி நினைக்கிறேன். அவள் என்னோடு வாழ்ந்த நாட்களைப்பற்றி நினைத்துப் பார்க்கிறேன். என் நெஞ்சமெலாம் நெக்குருகிப் போகிறது. விழியிரண்டில் கண்ணீர் திரைபோடுகிறது. எனது ஜீவஜோதி, ஆறு வருடங்களுக்கு முன்னர் காற்றோடு கலந்துவிட்டாள். அவளது ரோஜாக் கன்னங்கள், தன் பொலிவிழந்தபோது அவளருகில் நானிருந்தேன். அவளின் அரவிந்த நயனங்கள் மூடிக்கொண்டவேளையிலும், அழகின் அதரங்கள் குவிந்தபோதும் எனது தெய்வமகளின் ஆவி பிரிகின்றகாலையிலும் அவர் பக்கலிலேயே நானிருந்தேன். அவளது மலருடலைச் செந்தீக்கு நான் விருந்தாக்கினேன் என் காவியக்கன்னி எனைப் பிரிந்தாள். உலகை மறந்தாள். ஐயோ! பாலையிலெனைவிட்டுப் பறந்தே போய்விட்டாள்.

ஆண்டுகள் ஆறு அழிந்தன. இன்றும், விரிந்த வானத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அவளின் சுடர் சந்திரிகாவதனத்தைக் காணவே இல்லை! வீசுகின்ற காற்றின் ஒலியைச் செவிமடுத்த வண்ணமே இருக்கின்றேன். அவளின் மதுரகீதத்தை அஃதென் காதிற்பாய்ச்சவே இல்லை. லட்சோப லட்சம் புஷ்பங்கள் மலர்ந்தவண்ணமே இருக்கின்றன. அவற்றில் ஒன்றுகூட எனது தலைவியின் சேதியை எனக்குக் கொணரவேயில்லை. எண்ணிலடங்காத ஜீவன்கள் புதிதுபுதிதாகப் பூவுலகில் உற்பவமாகிக் கொண்டே இருக்கின்றன. அவற்றில் ஒன்றுகூட எனது மாதுர்ய மங்கையின்பாலிருந்து மகிழ்வுதருஞ் செய்திகளைத்

தரவே இல்லே. என் சந்துஷ்டி என் சாந்தியாவும் அழிந்து பட்டதே?

ஏ ஜகத்ரட்சகா! எனது சுகிர்த ரோஜாவை எங்கு தான் வைத்திருக்கிருயடா? அவளின் ஆத்மாவோடு நான் ஒரேஒருமுறை பேசத் துடிக்கிறேன். நீ நினைத்தால் என் மனோரதத்தை ஈடேற்ற முடியாதாடா? ஏடா! என் மானுடப் பாஷை உனக்குப் புரியவில்லையா? கல்லாக இருக்கின்ருயே?

என் அபிலாஷையை ஜகத்ரட்சகனும் உதாசீனஞ் செய்துவிட்டான். அழுகிறேன். எனது ராஜாத்தியை நினைத்துநினைத்து அழுகிறேன். ஆயிரம் பெண்களில் அவளும் ஒருத்தியாக வாழ்ந்திருப்பாளேயானுல் அவளை நான் மறந்திருக்கக்கூடும். அவள் ஆயிரத்தில் ஒருத்தியாக வாழ்ந்தவள் அல்லவா?

இங்கே பூமியிலே ''கற்பென்ருல் அதென்ன?'' என்று கேட்கக்கூடிய வேசிகள் இருக்கின்ருர்கள். மோஹாந்த காரத்தில் மூழ்கிக்கொண்டு அவர்கள் எல்லாம் மகிழ் வோடு திரிகிருர்கள் இத்தகைய பீடைகள் உலகிடை வாழ்ந்து, உவகையில் ஆழ்ந்திருக்க குலமங்கையான நீமட்டும் ஏனோ விண்ணுலகுநோக்கி விரைந்து விட்டாய்?

உற்றவளே, நீ நிர்க்கதியாய் எனைவிட்டுப் போனபின் எத்தனையோ பகல்கள் கழிந்துவிட்டன. காலங்களும் காட்சிகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன.

ஆனுல்,

என் தேவகன்னிகையே! உன் நினைவுமட்டும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது. எத்தனை ஜென்மங் கள் எடுத்தாலும் ஓ என் வானமுதே, என் இருதயத்தை விட்டு ஓடிவிடாதே!

ஈழத்து நூல்வரிசை: 1.

# இலக்கியச் சோலை

[கட்டுரை நூல்]

— செந்தமிழ்மணி. பொ. கிருஷ்ணபிள்ளை —

— இரசிகமணி கனக. செந்திநாதன்

**ச**மீபகாலத்தில் - சுமார் பத்துவருட காலத்தில் - ஈழத்தில் சிறுகதைகளாக, நாவல்களாக கவிதைகளாக, நாடகங்களாக இன்னும் பிற நூல்களாக 350 நல்ல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. வந்தவற்றுள் கட்டுரை நூல்கள் சிறிது குறைவுதான். கட்டுரை என வந்தவற்றுள்ளும் சமயசம்பந்தமானவையே அதிகம். இலக்கிய சம்பந்தமான கட்டுரை நூல்கள் 25க்குள் இருக்கலாம். அவற்றை நோக்கும்போது தமிழ்நாட்டிலும் பார்க்க நாம் எவ்வளவோ பின்தங்கியிருப்பது தெரியவரும். இந்த நிலைக்குக் காரணம் சாதாரண ஆக்க இலக்கியகாரர் என்று எண்ணப்படும் எழுத்தாளர்கள் கட்டுரைப்பக்கம்- முக்கியமாக இலக்கியக் கட்டுரைப்பக்கம் - திரும்பிப் பார்ப்பதில்லை. நாங்கள் படித்தவர்கள், வரன் முறையாகப் படித்தவர்கள் - தமிழ்காக்கப் பிறந்தவர்கள் - தமிழ் எங்களுக்கே சொந்தம் என்று வாய்வேதாந்தம் பேசும் பண்டித, வித்துவான்கள்கூட ஆளுக்கு ஒரு புத்தகம் - இலக்கியப் புத்தகம். எழுதவில்லை தமிழ் வரம்புகாக்கப் பிறந்த இந்தத் தக்கோர் தங்கள் இரசனையை வெளிப் படுத்தித் தக்கதொரு நூலையாவது தந்தால் தமிழ் வாழாதா? வளராதா?

வந்த நூல்களுள் என் சிந்தையைக் கவர்ந்த நூல் இலக்கியச்சோலை. இதை எழுதியவர் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள். அன்னார் கோப்பாய் பலாலி ஆகிய அரசினர் ஆசிரியகலாசாலைகளில் தமிழ்ப்

பணியாற்றியவர். ஈழத்தின் சிறந்த விமர்சகர்களில் ஒருவர். ஈழத்துப் பேனுமன்னர்கள் வரிசையில் அறிமுகப்படுத்தப் பட்டவர். அவரை அறிமுகம் செய்யும்போது நான் பின் வரும் குறிப்பையும் சொல்லிவைத்தேன். இந்தப் பண்டிதர் இலக்கியங்களை இரசித்தலிலும், நல்லநூல்களை விமர்சித் தலிலும் வல்லவராயினும், பூச்சி, புழுக்கள் அழகிய சிறு பறவைகள் வண்ணத்திப்பூச்சிகள் என்பவற்றின் அழகிலும் சொக்கியவர். ஆம். அழகுணர்ச்சியை இரசிப் பவர். அதில் ஊறித்திளைப்பவர். இதை ஏன் கூறுகிறேன் என்றால் இலக்கியச்சோலைகளில் உள்ள அநேகம் கட்டுரை கள் - அது எவ்வகைப்பட்ட பொருளுடையதாயினும் சரி - அழகுணர்ச்சியையே அழுத்திக் காட்டுவனவாய் அமைந் துள்ளன. இது ஆசிரியருடைய மனோநிலை இலக்கியத்தை இரசிப்பதிலும் எழுதுவதிலும்கூடப் பதிந்திருக்கின்றதை நமக்குக் காட்டுகின்றது.

இந்த இலக்கியச் சோலையுள் இராமாயணக் கட்டுரை கள் ஏழும், திருக்குறள் பற்றிய கட்டுரைகள் மூன்றும், பொதுக்கட்டுரைகள் ஐந்தும், பாரதியார், கவிமணி, தங்சத்தாத்தா ஆகிய முப்பெருங் கவிஞர்களின் கவிதை பற்றிய மூன்று கட்டுரைகளுமாக 18 கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.

பழமையும் புதுமையும் ஒருங்கு சேர்ந்த கட்டுரை நூல் என்றவகையில் இலக்கியச்சோலை என் மனதைக் கவர்ந்தது. 'பழமையிற் காலூன்றிப் புதுமையை இரசிப் பவர்' என அனேக எழுத்தாளர்களைச் சிலர் வர்ணிப்பது வழக்கம். மனமறிந்த பொய் இது. ஆனால் இந்நூலாசிரியர் கம்பராமாயணத்தைப் போலவே மலரும் மாலையையும் இரசிப்பவர். எழுதுபவர். அவற்றை வரிசை அறிந்து உய்த்துணர்ந்தவர்.

கம்பராமாயணம் பற்றிய ஏழு கட்டுரைகளையும் தனித்தனி பேசலாம். எனினும் மாதிரிக்கு ஒன்றாக முதலா வது கட்டுரையைப் பற்றியே சொல்லுகின்றேன்.

'பளிங்கனைய கவிக்கரசன் கம்பனெனும் தேவன் பண்ணிவைத்த காவியமாம்' இராமாயணம் தமிழ்த்தாயின் மணிமுடி. இதைப் பலர் விமர்சித்துள்ளனர். பலர் பல வகையில் அணுகியுள்ளனர். வ. வே. சு. ஐயரவர்கள் கம்பனை உலக மகாகவிகளுடன் ஒப்பிட்டுக் கம்பனின் பெருமையை நமக்குக் காட்டியுள்ளார். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் நல்ல கவிதைகளை மாலையாக்கி இடையிடையே வசனமெழுதி கம்பராமாயணசாரம் தந்துள்ளார். பி. ஸ்ரீ அவர்கள் தம்முடைய சதங்கை நடையில் புதுமையாகக் கம்பசித்திரம் எழுதினர். இரசிகமணி டி. கே. சி. அவர்கள் பாடல்களைத் தாளக்கட்டோடு பாவந்தோன்ற வாசிப்பதன்மூலம் ரசனையை ஊட்டினர். எங்கள் பண்டிதமணி சி. க. அவர்கள் கம்பன் ஒரு நாடகக் கவி என ஓர்ந்து பாத்திரங்களை நம்முன் கொணர்ந்து நாடகமேடையில் நடப்பதைப்போல இராமாயணத்தைக் காட்டியுள்ளார். பாத்திரங்களின் குணசித்திரப் படைப்பு அவரது மூச்சு. G. C. E. பாடநூலாக இருக்கும் கம்ப ராமாயண இரண்டு படலங்களுக்கு எங்கள் தேசப் பண்டிதர்களும் வித்துவான்களும் இரசனை எழுதப் புறப்பட்டு ஆகா நன்ருயிருக்கிறது. தேன்சொட்டுகிறது உள்ளம் உவகையாற்றுள்ளுகிறது. எனத் தமக்குத் தாமே தலையை ஆட்டினர்கள். மாணவர்கள் தலைதான் ஆடக்காணேம் இவ்வளவுக்கும் பிறகு செந்தமிழ்மணி 'பொ.கி.' அவர்களின் பாதை எது? என்று யோசித்தால்-வாசித்தால்-இந்த இலக்கியச்சோலையின் பெருமை விளங்கும்.

அவர் பழய ஒரு கூட்டத்தாரின் பாதையைப் பின்பற்றி தமது அழகுணர்ச்சியைச் சொல்லுக்குச் சொல் ஆழ்ந்த கருத்துப் பீறிடும் வகையை நமக்குக் காட்டியுள்ளார். பண்டிதமணி கதிரேசச் செட்டியார், பெருஞ்சொற்கொண்டல் சரவணமுதலியார் வேதாசலம் போன்ருர் பின்பற்றிய இரசனைப்பாதை இது. இது சாதாரண தட்டல் தடவல் படிப்பாளர்களால் முடியாத சங்கதி.

ஒரேயடியாகப் புழுகாதேயும் உதாரணம் சொல்லும்

என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதுக்குக் கேட்கிறது. ஆம். நானும் அந்த இடத்துக்குத்தான் வருகிறேன்.

இராம லக்குமணர்கள் தங்கக்கூடிய இடமாக, அகத்திய மகாமுனிவன் பஞ்சவடி என்ற இடத்தைக் காட்டுகிறான். பஞ்சவடி என்றால் ஐந்து ஆலமரங்களின் தொகுதி கொண்ட இடம். "முனிவன் காட்டுமிடம் உறையுளுக்குரிய இலக்கணங்களெல்லாந் திருத்தமுற அமைந்திருத்தலைக் கம்பன் நயம்பட நமக்குத் தீட்டிக்காட்டுகிறான் வேறெப்புலவனும் காட்டமுடியாத சாந்தந்தவழும் புனித இயற்கை நலங்கனியும் சூழல் இதோ நம்முன் காட்சி தருகின்றது".

ஓங்கிமர னோங்கிமலை யோங்கிமண லோங்கி
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதோர் குன்றின்
பாங்கருளதால் உறையுள் பஞ்சவடி மஞ்ச"

குளிர்தருக்கள் வான் முகட்டை ஒட்ட வளர்ந்திருப்பதைக் காட்ட முதற்கண் மரனுக்கு (மரன் - மரங்கள்) 'ஓங்கு' என்ற முக்காலமும் உணர்த்தும் பெயரெச்சத்தைப் பெய்து வைக்கிறான். வசிப்பிடம் மனதிற்குகந்த மங்களகரத் தோடும் பொலிவதனை 'ஓங்கு' என்ற உயர்தனிச்சொல்லை ஓராமடியிலே நான்குமுறை எடுத்தாள்வதினாலேயே காட்டுகிறான்.

மரனும் மலையும் மணலும் ஓங்கி நிற்கும் காட்சி எங்கள் மனத்தையும் வானளவிற்கு ஓங்கச் செய்கிறது. சோலை வளம் நனிதுளும்புவதைப் புலவன் 'குலை குலாவு குளிர்' என்ற மூன்று பதங்களையும் மோனை நயத்துடன் ஓசை நலமும் பொருந்த அடுத்தடுத்து வைப்பதனாற் காட்டுகின்றான். பூக்கள் தனித்தனியே இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காட்சியளிக்காது எக்காலமுங் குலை குலையாகப் பொலிந்திலங்கும் முறையிற் காட்சி தருவதனை 'குலை குலாவு' என்ற தொடராற் புலப்படுத்துகின்றான். 'விம்மி' என்ற சொல் சோலை வளமிகுதியைக் கண்முன் காட்டுகின்றது. ஆலமரம் ஒன்றே பேரரசனும் பெருந்

தாளையும் ஒருங்கிருக்க இடங்கொடுக்குமெனின் ஐந்து ஆலமரங்கள் இந்தச் செழு நிலப்பரப்பிலே குன்றின் பாங்கரிலே குறையா நீரச்சுனையருகிலே கொழுத்து வளர்ந்திருக்கும் காட்சியின் நேர்த்தி சொல்லளவிற்கு அப்பாற்பட்டதல்லவா? ஆலமரக் காட்சி அரும்பெறற் காட்சியாயிருப்ப அதற்கு முடிசூட்டும் பான்மையில் மெல்லென ஒலித்துத் தூங்கித் தூங்கித் தவழ்ந்து தவழ்ந்து செல்லும் ஆறொன்றும் இடைபுகுவதாயின் இவ்வளமார் காட்சியை விண்ணவரும் கண்டின்புற வருதல் ஒருதலை. தமிழின் வளம் போலவே அகத்தியன் காட்டுஞ் சூழலும் இனிமை தவழ்வ தொன்றாயிருக்கிறது. மரம் மலை மணல்களில் வளத்தோடு சோலைச் செழுமையும் பச்சிலை ஆலின் கொழுமையும் ஆற்றின் சலசல என்ற சப்தமும் நம்மை எங்கோ கந்தருவ உலகிற்கு அழைத்துச் செல்லுகின்றன. இக்காட்சி யோகியருக்கும் போகியருக்கும் ஒருங்கே விழைவுதர வல்லது.

செந்தமிழ்மணி பொ. கி. யின் அழகுணர்ச்சி இவ்விடத்தில் கொப்புளித்துப் பாய்வதைப் பார்க்கின்றோம். சொற்கள்தோறும் உள்ள அழகை அவர் தொட்டுக் காட்டும் பான்மைகண்டு வியக்கிறோம்.

இனி, தெய்வப்புலமைத் திருவள்ளுவர் குறளை அவர் எப்படிக் காட்டுகிறார் என்பதைப் பார்க்கலாம். இந்த அவசர யுகத்திலே 1330 குறளையும் படிக்கமுடியாத நாம் டாக்டர் மு. வரதராசனாரிடம் சென்றால் பெரிய விளக்கத்தோடுகூடிய நூலையோ பொழிப்புரையையோ தந்து திருப்பிவிடுவார். பண்டிதமணி சி. க. விடம் சென்றால் மூன்று குறள்களை அருமையான குறள்களைத் தந்து இவை வாழ்க்கையின் மூன்று படிகள் எனக் காட்டுவார் அவை தன்னைத்தான் காதலனாயின் - அற்றார் அழிபசிதீர்த்தல் - மனத்துகண் மாசிலனாதல் என்பவைகளாம். செந்தமிழ் மணி பொ. கி. அவர்களிடம் சென்றால் இந்த அணுக்குண்டு உலகத்துக்கு ஒரேஒரு குறள் போதுமே என்று கூறிவிட்டு, வேறொரு நடையில், இலகுவான நடையில் அந்த ஒன்றை விளக்குவார். அதை நீங்களும் கேளுங்கள்.

நான் வாசித்த திருக்குறள் சம்பந்தமான கட்டுரைகளில் இதைவிடச் சிறந்ததை நான் காணவில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. கட்டுரையின் தலைப்பு அறம்பாடிற்று அவர் தொடங்கும் அழகைப் பாருங்கள்.

ஒருதினம் தருமதேவதை தன்னருட்பார்வையைப் பூவுலகத்திலே செலுத்தியது பெரும்பாலான அறங்கள் பூமியிலே சிறப்பாக நிகழுவதை அது பார்த்த அளவில் நிறுத்திவிடாது எதிர்காலத்தையும் மிக உன்னிப்பாகப் பார்த்தது. காலத்திரையினூடே அது கண்ட காட்சியால் அதன் திருமுகத்திற் சஞ்சலத்தின் சாயலும் கண்ணில் நீரும் தோற்றின. பத்தி இருக்கவேண்டிய இடத்திலே புத்தி புகுந்து நின்று செயயுங் கோர தாண்டவத்தைக் கண்டால் தருமம் இரங்கி ஏங்குவதியல்பே தரும தேவதை உடனே பூவுலகத்தைநோக்கி வரலாயிற்று. பூவுலகில் எங்கு செல்கிறதோ? ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அது வேறெங்குஞ் செல்லாது தமிழ்நாட்டையே நாடியடைந்தது.

பானருட் சிறப்பில் வளர்ந்த அப்பிள்ளை முரசக்குரல் எழுந்தாற்போலத் தன் திருவாய் மலர்ந்து ஏதோ கூறியருளியது. நன்கு கவனித்தபோது அது அருமைப் பாடல்களைச் சொரிவது தெரிந்தது. அதிசயம் யாதெனில் அது நீண்ட பாடல்களைப் பாடவில்லை. ஒன்றேமுக்காலடிக்கு மேற்படாத குறும்பாக்களையே அது பாடியது..... (அந்தக் குறள்) மணிகளில் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னே தோன்றப்போகின்ற விஞ்ஞான உலகினுக்கு நல்ல வழி காட்டி நற்புத்தி கூறும் மணி ஒன்று ஒளியை அள்ளிச் சொரிகின்றது.......... அதன் ஓசைக்குச் சிறிது செவி செவிசாய்ப்போம். அது கூறுகிறது 'மனிதா! உன் மூளை உன்னை எங்கெங்கோ கொண்டு சென்றுவிட்டது. உன் அறிவொளியின் முன் விண் தனது இரகசியங்களை உதிர்க்கிறது. மண் தனது மந்திரங்களை மரியாதையுடன் வெளிக்கொணருகிறது. ஆழ்கடல் அரிய செய்திகளையும் புலப்படுத்துகிறது........ நீ நாளையும் கோளையும் காற்றையும் நீரையும் கட்டுப்படுத்திவிட்டாய். உன் ஆற்றல் மிகுதியாற் புத்தம்புதிய சுவர்க்கத்தையும், சூரிய சந்திரர்களையும்

ஆக்கவல்லாய்'' (இந்தப் பந்தியில் செந்தமிழ்மணியின் வசனநடை அருமையாக அமைந்துள்ளது.

இதனைக்கேட்ட விஞ்ஞான மனிதமன்னன் நீட்டி நிமிர்ந்து மேலும் மேலும் தன் புகழைக் கேட்க அவாவு கிறான். காதைத் தீட்டிக்கொண்டு கேட்கிறான் இப்போது தன் குரலிற் கடூரத்தன்மை தொனிக்க அது பேசுகிறது''

அது பேசிய - பாடிக்காட்டிய பாடல்

''அறிவினா னாகுவதுண்டோ பிறிதினோய்
தந்நோய் போற் போற்றாக்கடை''

இந்தக் குறளுக்கு ஆசிரியர் எழுதிய விளக்கத்தை விரிவஞ்சி விடுகின்றேன்.

''வள்ளுவப்பிள்ளை வாயிற் பிறந்த இவ்வாக்கு ஆக்கந் தரும் வாக்கு. முக்காலத்துக்கும் பொருந்தும். மெத்தச் சிறந்த வாக்கு. எக்காலத்திலும் பார்க்க அறிவியலாளர் எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் பொல்லாக் குரலெழுப் பும் இக்காலத்துக்குச் சாலப் பொருந்தும் வாக்கு. அணுக் குண்டுயுகத்துக்கியைந்த அருட்குண்டு வாக்கு'' எளிமையும் அதோடு பொருளாழமும் கொண்ட இந்தப் பந்தி இந் நூலின் மணிமுடி.

இந்தக் கட்டுரையைப்பற்றிப் பண்டிதமணி 'சி. க.' அவர்கள் எழுதியிருப்பது இது ''எதற்கும் எட்டாமிடம் சுத்தமாய் இருக்கவேண்டுமென்கிறது சோதிடம். இவ் விலக்கியச்சோலையுள் எட்டாமிடம் உயிர்ப்பின் சிகரம். அங்கே உய்யும்வகை உயிர்துடிக்கிறது. அப்பகுதிக்கு அறம்பாடிற்று என்று பெயர். அறக்கடவுள் கை கால் கண் மூக்கு உள்ள ஓர் ஆண்பிள்ளையாய் 'அறஞ்செய விரும்பு' பாடிய அன்னையின் உடன்பிறப்பாய் அங்கே அரசு விற்றிருக்கின்றது. அதன் வாய்மலர் 1330 மூவிதழ்கள் அன்றவிழ்ந்த விரிவதொரு தாமரைப்புஷ்பம். அவ்விதழ் களுள் ஒன்றிலிருந்து பரவுகின்ற சுகந்த பரிமளம் அச் சோலை எங்கும் பரவி அறிவைச் சடம்செய்யவொட்டாது

தடைசெய்கிறது. "அறிவினு ளுருகுவதுண்டோ பிறிதினேய் தந்நோய் போற் போற்ருக்கடை" என்பது அந்த அமிர்த இதழ்.

நமது தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களது எத்தனையோ பாடல்கள் - நாடறிந்த பாடல்கள் இருக்கவும் அந்தப் பாதையிற் செல்லாமல், அரைத்த மாவையே அரைக்காமல் நாமகள் புகழ்மாலையிலிருந்து மாணவர்களுக்கும் மற்றையோர்க்கும் இரசனைதரக்கூடிய பாடல் சிலவற்றை மாலைபோலத் தொடுத்துத் தந்திருக்கிருர்.

நாமகளாங் குழந்தை அழும்பாவனையிற் புலவருக்குக் காட்சிதருகிறது. குழந்தைகள் பெரும்பாலும் அழுவது பாலுணவு கொள்ளுவதற்கேயென உணரும் புலவர்பிரான் பாலுக்குப் பஞ்சமில்லையென்று பலவாற்ருனும் பகருகின்ருர். தமிழ்நாட்டுத் தெய்வப்பிரான் தன்மீது மட்டிலா நேயங்கொண்ட உபதன்யு என்னும் பாலகனுக்குப் பாற்கடலையே முழுவதாக ஈய்ந்த வரலாற்றை உரைத்து அதன் மேலும் சீர்காழிச் செம்பவளவாய்க் குழந்தை தேம்பியழ அன்னையுமை பாலமிழ்தூட்டிய பெருந்தகைமையைக் காட்டி,

பாலன் குரல்கேட்டுப் பாற்கடலை யீந்தபிரான்
ஓலஞ் செவிகேட் டுன்துபசி தீராஞே?
தேம்பி யழுத சிறுவனுக்குப் பால்சுரந்த
காம்பனதோ ளன்னை கருணை புரியாளோ?

என அன்னையும் அத்தனும் நாமகளுக்கும் நற்பாலூட்டுவார் என்கின்ருர்.

இக்குழந்தை பிறந்த குடியோ செல்வச் சீர்சிறப்பாற் பேர்பெற்றதொன்று. இப் பிள்ளைக்கு மாமனுரோ பாற்கடலிலேயே பள்ளிகொள்ளும் முடிவிழா அழகன் என்று அழகாக வடிதமிழில் வார்த்துக் காட்டுகின்ருர் புலவர்:

வானுறங்கு மேனி வடிவழக னுன்மாமன்
தானுறங்கும் பாற்கடலைத் தந்துபசி தீராஞே?

உலகத்தைப் பாதுகாக்கும் பேரருள் மாயனே. குழந்தைச் செல்வத்தின் மாமனுர் ஆகின்ருர். உலகத்தைப் பாதுகாக்கும் பரந்தாமன் மேனி, அளவின்றிப் பரந்து உலகிற்கு நலனீயும் நீலநிற வான்போன்றது. ஞானகுருவாம் இம் மாமனுக்குப் பூத சம்பந்தமான நீல வானை ஒப்புவமையாக்கப் புலவர் உள்ளம் கூசுகின்றது. நீலநிற வானில் மானிற மாயனை வைத்துக்காட்டும்போது வான் தன் ஒளியிழந்து வறிதே தோற்றந்தருதலால் வானை அடுத்து உறங்கும் என்ருெரு சொல்லை கருத்து நிரம்பப் புலவர்பெருமான் தெரிந்தெடுத்துக் காட்டுகிருர்.

18 கட்டுரைகளில் 3 கட்டுரைகளைத் தொட்டுக் காட்டியிருக்கிறேன். இந் நூலில் உள்ள தமிழில் ஒழுகும் அழகு என்ற கட்டுரையைப்பற்றி அவசியம் பேசியிருக்கவேண்டும். நேரம் என்னை நெருக்குகிறது. அழகு என்ற சொல்லைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வெவ்விடங்களில் எப்படி எல்லாம் கையாண்டிருக்கிருர்கள் என்பதைக் காட்டும் அருமந்த கட்டுரை அது. அரைகுறைப் படிப்புடையவர் அண்டமுடியாத கட்டுரை. செந்தமிழ்மணி 'பொ. கி.' என்ருலே அழகு. அவர் கட்டுரைகள் அழகினுள் ஆராய்ச்சி. O

# "புதுக்குவோம் தமிழன் மானம்"

பழந் தமிழ் போற்றுவோம் யாம்
பாரினிற் புதுமை யாவும்
இளந் தமிழ் தன்னிற் சேர்ப்போம்
இனிமையில் இனிமை பொங்கும்

அறிவியல் ஆற்றல் மற்றும்
அன்புடைச் செயல்கள் யாவும்
தறியினில் நூலைக் கோர்க்கும்
தன்மையிற் செய்வோம் யாமே.

புதுப் புதுக் கருத்துத் தோற்றிப்
புத்தக உருவிற் றந்தே
புதுக்கு வோம் தமிழன் மானம்
புனைவமே புகழின் மாலை.

O "தமிழடியான்"

சிறுகதை

# வேளை

மு. கனகராசன்

கங்கை நிர்ச்சலனமாக ஓடிக்கொண்டிருந்தது. அவரும் அப்படித்தான் அதன் ஓரத்தில் நடந்துக்கொண்டிருந்தார்.

கரைகளில் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களில் மாலை மதியத்தின் வண்ண ஜாலங்களைப் பிய்த்துத் தூவியதைப்போல மலர்க் கூட்டங்கள் மொய்த்துக் கிடந்தன.

சிவப்பு! - மஞ்சள்! வெள்ளை! ஊதா! நீலம் ..

கடம்பு! காந்தை! காஞ்சி! பாதிரி! அசோகு! அரளி.

அத்தனை பிரமாண்டமான மரங்களில் எத்தனை சின்ன சுகந்த மலர்கள்! அவை உலகையே நந்தவன மாக்குவன.

மிகச் சின்ன மனித நெஞ்சத்தில் மலர்த்தட்டமே வீற்றிருக்க இடமுண்டு. அம் மலர்கள் உலகையே கந்தர்வமாக்குவன.

இயற்கை தனித் தனியே எழிலோடும், கம்பீரத்தோடும், மலர்ச்சியோடும் மிளிர்ந்தது.

அவர் பரந்த தன் மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு தேஜஸ் மிளிரும் தோற்றத்தோடு நடை பயின்றுகொண்டிருந்தார்.

மாலை ஞாயிறு தன் கிரணசரங்களை மலர்க் காம்புகளில் எய்து அவற்றை ஒவ்வொன்றாக வீழ்த்தினான்.

அவர் குனிந்து எடுத்தார்.

மலர்.

அவர் குனிந்து எடுத்தார்.

மலர்.

அவர் குனிந்து எடுத்தார்.

ஒளிச்சரங்கள் தந்த அவற்றைக் கொண்டு ஒரு மலர்ச்சரமே உருவாயிற்று.

அவர் நடந்தவண்ணமேயிருந்தார்.

மரங்கள் குறைந்தன.

இல்லறத்துக்கும், துறவறத்துக்கும் இடைப்பட்ட வாலிபத்தின் உள்ளம் போன்று மாலை பிணைந்து நின்றது.

அவர் திரும்பினார்.

தாழம்பூப் புதர்கள்! மல்லிகைக் கொடிகள்! ரோஜாச் செடிகள்!

ரம்பம்போலும்தாழை மடல்.

ஒடிந்து விழும் மல்லிகைக் கொடி.

முட்கள் குத்தும் ரோஜாச் செடி.

அவர் விரைந்து நடந்தார்.

எதிரே—

மாமலர்.

எழிலார்ந்த ஒரு மங்கை.

சந்தனக் கட்டையைத் தேய்த்துத் தேய்த்து எடுத்த மையிற் செய்ததைப் போன்ற உருவம்.

நெற்றியில் நாகலிங்கத்தையும், கண்களில் நீலோற்பலங்களையும், கன்னங்களில் ரோஜாக்களையும், கழுத்தில் சண்பகத்தையும், மூக்கில் குருக்கத்தியையும், மார்புகளிற் தாமரைகளையும், இடுப்பில் மகிழையும், தொடைகளிற் செவ்வரத்தைகளையும், பாதங்களில் பாதிரியையும் சூடிக்கொண்டு அவள் வந்தாள்.

அவர் நடந்தார். எடுத்த பூக்களில் ஒருமாலை தொடுத்துக்கொண்டு நடந்தார்.

அவள் வந்தாள். பூமாலையொன்று தென்றலிற் தவழ்வதைப்போல வந்தாள்.

அவர் உயர்த்திய காலை முன்னால் வைக்க இடமின்றி நிமிர்ந்தார்.

அவள் நின்றிருந்தாள்.

கண்களும் கண்களும்.

அவளின் எத்தனையோ பிரயத்தனங்கள் தோல்வியிற் சங்கமித்திருந்தாலும், இன்று எப்படியும் அவரை அடிமைகொள்வதென்ற தீர்க்கமான முடிவோடு அவள் வந்திருந்தாள்.

அவரின் பார்வையிற் தீப்பிழம்புகள் அசைந்தன.

அவளின் வழிகளில் பெண்மையின் நளினங்களெல்லாம் சதிராடின.

இரு ஆம்பல்கள் ஒன்றையொன்று தழுவுவதைப்போல அவளின் கரங்கள் எழுந்து குவிந்தன.

அவரோ தனது இடது கரத்தில் மாலையை ஏந்திக் கொண்டு வலது கரத்தை உயர்த்திஞர். அந்தக் கை ஒரு அரசிலேயைப்போல கம்பீரமாக அவளை ஆசிர்வதித்தது.

அவள் நளினமாகப் புன்னகைத்தாள். அது ஏளனத்தாற் பின்னப்பட்டிருந்தது.

அவர் தன் அங்கியைச் சரி செய்துகொண்டு புறப்பட்டார். அப்போது-

"அழகாக இருக்கிறது மலர் மாலை"

அவர் உதடுகளாற் சிரித்தார்.

"மலர்களென்ருல் உங்களுக்குப் பிடிக்குமா?"

"அவை நிஷ்களங்கமானவை!"

"பெண்களைப் போல, அப்படித்தானே?"

"இல்லை! நிஷ்களங்கத்தைப்போல்?"

"உருவமற்றதைப் பற்றிப் பேசாதீர்கள். பொய்யை ஏன்தான் விரும்புகின்றீர்களோ?

'உய்ங்' எனச் சீறிவந்த காற்று அவரின் முதுகுப் புறமாக வந்து அவளைத் திக்குமுக்காடச் செய்தது. கூந்தல் மலர்க்கொத்தைப் பிடுங்கி எறிந்தது.

"உருவமில்லை என்பதஞல் காற்று பொய்யா?"

அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

நிலவு பாலித்தது. தென்றல் தவழ்ந்தது. நறுமணம் பரிமளித்தது.

அவள் சூழலைப் பார்த்தாள்.

"பாருங்கள் நிலவின் அழகை. தென்றலின் தழுவல் சுகம் தரவில்லையா?... மலர்களின் சுகந்தம் மயக்கந் தரவில்லையா?...

"அதைப் பாருங்கள்; மதன் தன் கரும்புத் தூரிகை கொண்டு யௌவனக் கவிதைகளையெல்லாம் வண்ணக்கலையாக்குகின்ருனே...

"அதோ பவளமல்லிகை, மைபூசி நாணமேலீட்டால் முகம் சிவக்கிறது...

கேட்டீர்களா அன்றிலின் குரல் துணையை அழைப்பதை?...

இதெல்லாம் எதஞல்? சொல்லுங்கள்! எதற்காகவென்று உங்களுக்கே தெரியுமல்லவா? எல்லாம்

வாலிபத்துக்குப் பதில் சொல்வதனுல்தானே? சொல்லுங்கள் அதனுல் தானே?''—அவள் பேசினுள்.

''இல்லே! அவைதான் அவற்றின் தர்மம் என்பதால்!...தேனுக்குக் கொட்டுவது தர்மமில்லேயா அப்படி...''

அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லே. அவரின் ஆகிருதியோ அவளை வலிந்து வளேந்து நின்றது.

'தென்றல் ஏங்கி ஏங்கித் தவிப்பதனுல்தானே இருப்புகொள்ளாமற் தவழ்கிறது?—

''மலர் ஏங்கித் தவிப்பதினுல்தானே தேனேச் சொரிகிறது.

''அன்றிலும், குயிலும் இதயத் தவிப்பினுல்தானே குரல் கொட்டுகின்றன?—

'' சொல்லுங்களேன். மனிதனுக்காகப் படைக்கப்பட்ட இவையெல்லாம் யௌவனத்தின் கவிப் பொருளான ஒன்றுக்காகத் தவிக்கும்போது நாம்மட்டும்...''

உண்மைதான்! ஆத்மாவும் தவிக்கக்கூடியதுதான் பெண்ணே.

சிறிதுநேரம் அவள் அமைதியாகிப் பேசினுள்.

மீண்டும்—

''உலகில் மனிதராசிதான் ஏன் இருக்கிறது? எல்லாமே விரதங்காத்தால் உயிர்க்கூட்டமே அழிந்துவிடாதா என்ன? இந்தப் பிரபஞ்சத்தை அப்படி நிர்மூலப்படுத்தவா தாங்கள் பிறப்பெடுத்தீர்கள்? சொல்லுங்கள் உங்கள் வாழ்வின் சின்னமாக ஒரு உயிரைப் படைப்பதல்லவா சிருஷ்டியின் தத்துவம். சொல்லுங்கள், நீங்கள் வாழ உங்கள் பெயர் நிலேக்க நீங்கள் யாரை விட்டுப் போகப் போகின்றீர்கள்? பேசுங்களேன்.''

அவர் அமானுஷ்யமாக சிரித்தார்.

இதுவரை நீ சொன்ன உதாரணங்களேகொண்டே பதில் சொல்கிறேன் கேள். விண்ணும், மண்ணும், நிலவும், கடலும் அழிவதில்லே. அவை வாழவேண்டுமே என்பதற்காக வாரிசுகளேச் சிருட்டிப்பதுமில்லே. ஆனுல் இப் பிரபஞ்சமே அவற்றின் வாரிசுதான்.

அவர் போக எத்தனித்தார்.

அவளால் இனியும் பொறுமை பேண முடிந்திலது. மிகவும் கீழிறங்கி வந்தாள். தன் வாதத்தில் தர்க்கபலம் இருப்பதாக எண்ணினுள்.

''இதோ என்னேப் பாருங்கள். இளமையின் சிங்காரங்களேயெல்லாம்

அள்ளி வந்திருக்கிறேன்; யாருக்காக? தங்களுக்காக! இளமையும், வாலிபமும் அனுபவிப்பதற்காகத்தான் தரப்பட்டிருக்கின்றன. யுவனும் யுவதியுமாக ஜீவன்களிருப்பதே ஒருவரணைப்பில் ஒருவர் துயிலத்தானே?-உங்களின் ஆத்மாவைப்பற்றிச் சொன்னீர்களே, அதுபோல என்னுள்ளேயும் ஒரு ஆத்மா இருக்கின்றதல்லவா?''

கேட்டுவிட்டுச் சாவதானமாக அவரை நோக்கினாள். தன் பார்வையிலேயே வினவை அவர் ஏற்றுக்கொண்டார்.

''...அந்த என் ஆத்மா தங்களுக்காகத்தானே தவிக்கிறது. ஒரு ஆத்மாவின் அபிலாசைகளைப் புறக்கணிக்கலாமா? - எனக்கு நீங்கள் வேண்டும். வாருங்கள், எனனோடு வாருங்கள் சோலையின் சுகமும், மாலையின் மயக்கமும் நமதாகட்டும் இளமையின் கற்பனையும், இரவின் கீதமும் பிறக்கட்டும். என் கையை ஏந்துங்கள். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களின் மாலையை எனக்குச் சூட்டுங்கள்.''

அவள் அவர்முன்னல் பணிந்தாள்.

அவர் அவளைக் கடந்து நின்ருர்.

அவள் நிமிர்ந்தபோது அவர் திரும்பி, அரைக் கோணத்தில் நின்றவாறே சொன்னுர்:-

''காலம் என்றுமே தவருக எதையுமே கணித்ததில்லை. இந்தத் தாத்பரியம் சரியானதாயிருக்கும் பட்சத்தில் நான் என் பாதையிலேயே போகிறேன். உன்னிடம் வர வரவேண்டிய ஒரு காலம் வருமாயிருந்தால் நிச்சயம் உன்னைத் தேடி வருவேன்.''

அவர் போகத்திரும்பி, கடைசியாக—

''ஆனுல்... ஆத்மாவுக்கு உருவமில்லை. அதற்குத் துணையும் தேவையில்லை என்பதை மட்டும் மறவாதே. ஆத்மா தன்னில்தானே விழித்துக்கொள்ளும்; தன்னில் தானே வாழும்.''

அவர் போயே விட்டார்.

## II

ஆறு பெருகிற்று. வற்றிற்று.

தாவரங்கள் மலர்ந்தன. கனிந்தன.

நிலவு வந்தது.

காலை புலர்ந்தது.

முட்டைகள் பெருகின

குஞ்சுகள் வளர்ந்தன.

## III

அழகு, சுகம், சுகந்தம், நிலவு, மாலை, மயக்கம், மலர், மகரந்தம், வர்ண ஜாலம், வசந்தகோலம்,

யௌவனம் எல்லாம் இருந்தன.

அவை இருந்தமை எப்படி உண்மையோ, அப்படி அவள் இருந்ததும் உண்மை தான்.

அதோ—

அவள் கிடக்கின்ருள்.

கருகிய தோல். குழிந்த கண்கள். எலும்பாலான முகம். ஈர்க்குகளினுலான உடல்.

மேற்சொன்ன எதுவும் அந்த மானிடப் பெண்'ணைப் பார்க்க வரவில்லை. அவளைப்பற்றிய பிரக்ஞையே அவற்றிற்குத் தேவையற்றது.

குயிலின் பாடல்.

மயிலின் ஆடல்.

அன்றிலின் அழைப்பு எதுவுமே அவளுக்கு அமைதி தருவதாயில்லை.

சதையின் ஜீவனெல்லாம் கரைந்த பின்னருங்கூட ஒரு ஏக்கம் சிக்கிக் கிடந்தது. எதையோ எதிர்பார்த்து, வேண்டி மகத்தான ஒரு க்ஷணத்துக்காக அது துடித்துக் கிடந்தது.

ஒரு ஊளைச் சப்தம்.

சாக்காட்டின் நினைப்பு அவளின் திரேகமெல்லாம் புல்லரிக்கப் பண்ணிற்று.

ஓடி வந்த அந்தச் சொறிநாய் அவளைப் நக்கிற்று. அதன் சொர சொரப்பான நாக்கு அவளைத் 'தீண்டியபோது அவளைப் போர்த்திருந்த ஈக்களின் கூட்டம் 'ஞொய்ங்' என எம்பிப் பறந்தது.

புண்கள். அழுகல். சீழ்.

நாய் நக்கும்போது விபரிக்கமுடியாத ஒரு சுகம் உண்டாகத்தான் செய்தது.

ஆனுல்—

அதை ஏற்க அவள் தயாராயில்லை.

நாயை விரட்டினுள். அது போக மறுத்தது. தன்னுடனே கூட போராடத் திராணியற்ற அவளைப் பார்த்துக் குரைத்தது.

நாய் தொலைவை நோக்கியது.

அது ஓடிவிட்டது.

அவளோ நோவினுல் இமைத் தோல்களைச் சுருக்கிக்கொண்டாள்.

திடீரென அவள் திரேகத்தில் ஒரு புல்லரிப்பு.

''அம்மா எழுந்திரு''

அந்தக் குரல் அவளின் இதயத்தை வருடியதால் கண்கள் சொரிந்தன.

அவளில் 'மின்சாரம்' பாய்ந்தது. அவர் அவளின் கரத்தை ஆதங்கத்தோடு பற்றினுர்.

இந்தஉலகில் தனக்கும் பரிவுகாட்ட ஒரு உயிர் இருக்கிறதே என்றெண்ண அவளுக்கு வியப்பாயிருந்தது.

''இந்தப் பாவியைத்

தங்களின் கரம் தொடக் கூடாதே சுவாமி''

''அந்தப் பயமே உங் களைப் புனிதப்படுத்தப் படக்கூடியதுதான் அம்மா.

தங்களின் வார்த்தை கள் எனக்கு உயிர்தருகின் றன. ஆனால் என் ஆத்மா என்றோ மரித்து என்னை விட்டுப் போய்விட்டது. அதனால்தான் இந்த உடல் புழுத்துப்போயிற்று. ஆனால் இவ்வுடலை யாருக்காகவோ சாகவிடாமல் வைத்திருக் கின்றேன் இதில் கண்க ளிருக்கின்றனவே அதனால்.

அம்மா! தப்பும் தவறு மாகப் பேசுகின்றீர்களே. அப்படியெல்லாம் சொல் லாதீர்கள். ஆத்மா என் றுமே மரிப்பதில்லை ஏதோ ஒரு பிராயச்சித்தத்துக் காக நீங்கள் வாழவிழைவ திலிருந்தே உங்களின் ஆத் மாவை நான் காண்கின்றே னம்மா

சுவாமி! என்னை மன்னி யுங்கள். இப்படியான தேஜஸ் நிறைந்த வார்த் தைகளுக்காகத்தான் சுவாமி நான் ஏங்கினேன் சுவாமி! இப்படியான மொழிக்குரிய தாங்கள் யார் என்று நான் அறிய லாமா?

பொன்போலும் கை களால் கீழ்ஒழுகும் அவளைப் பற்றி நிறுத்தினார் அவர். ஆஜானுபாகுவான அவ ருக்கு முன்னால் ஒரு சிற் றெறும்பாகக் கூனிக் குறுகி நின்றாள்.

தன்மீது கிடந்த வஸ் திரத்தை அவர் எடுத்தார். பிழம்பொத்த அவரின் மேனி அவளின் கண்களை கூசச் செய்தது.

என்னை எப்படி அறி முகப்படுத்துவது? என் இத யத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு இத்தனைக் கால மும் தங்களைத் தேடி னேன்... நான்தானம்மா உபகுப்தன்.

சொல்லிக் கொண்டே தன் அங்கியை அவளுக்குப் போர்த்தினார்.

''ஆ! எனக்கு வேளை வந்ததா?''- பரவசமேலீட் டால் அவள் அவரின் பாதங்களிலேயே விழுந் தாள்.

அந்தக் காவிப் போர் வைக்குள் கிடந்த அவள் மீண்டும் எழுந்திருக்கவே இல்லை.

---

''வைகறை'' ஆண்டு சந்தா ரூபா :1-50